(இ) இல்லை. எனினும் வட ஆற்காடு மாவட்டத்தில் தொழு நோயால் பாதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக் கென்று ஒரு இல்லம் திறக்கும் திட்டம் அரசின் ஆலோசனையில் உள்ளது.

திரு. மா. பா. சாரதி : ஏற்கனவே இந்தப் பிச்சைக்காரர்கள் விடுதி வேலூரில் கட்டுவதற்காக அரசிடம் கோரப்பட்டுள்ளது. அப்படி இப்போது இல்லை யென்றாலும் நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தியுள்ள பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு திட்டத்தின் அடிப்படையிலாவது வேலூரில் பிச்சைக்காரர்கள் புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் ஒரு இல்லத்தை அமைக்க அரசாங்கம் முற்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பாணூர், உளுந்தூர்பேட்டை, வரகூர் இம் மூன்று இடங்களில் கட்டுவதற் கான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அவைகளுக்கான நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளன. வேலூரில் கட்டுவதற்கு உத்தேசம் இருக் கிறது. அதுபற்றிய செயற்குறிப்பு அனுப்பப்பட்டவுடன் கட்டப் படும்.

குப்பல் திரு. கே. எஸ். ராமகிருஷ்ணன் : மதுரையில் ஏற்கனவே பல லட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்து ஒரு பெரிய பிச்சைக்கார விடுதிக்குக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. நகரசபையிலிருந்து போதுமான நிதி உதவி அதற்குச் செய்ய முடியாத நிலையில் அங்கு அதிகப்படியான பிச்சைக்காரர்களுக்கு இடம் தர முடியவில்லை. ஆகவே, அரசாங்கத்திலிருந்து போதிய அளவு பணம் அதற்காகக் கொடுத்து ஏற்கனவே உள்ள அந்த விடுதியை நல்ல முறையில் நடத்துவதற்கு ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதுரையில் அப்படி ஒன்று இருப்பதாகத் தகவல் இல்லை. போலீஸ் இலாகா மூலம் பிடித்து, சென்னையில் மீனம்பாக்கத்திலும், காஞ்சீபுரத்திலும் பிச்சைக்காரர்கள் இல்லங்கள் நடத்தப்படுகின்றன. தனியார், தயா சதன் என்ற இல்லத்தை நடத்துகிறார்கள். ஆறு முனிசிபாலிட்டி களில், உதகை, செங்கல்பட்டு, விருதுநகர், திருச்சி, கோவை, நாகர் கோவில் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறார்கள். குறிப்பாக சிதம்பரத்தில் உள்ள இல்லத்திற்கு அரசாங்கம் நிதி உதவி செய்கிறது. வேறு செயற்குறிப்பு இப்போது இல்லை.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether any survey of beggars has been taken in this regard?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படி எடுக்கப்பட்டுத்தான் கிட்டத்தட்ட 60,000 பிச்சைக்காரர்கள் இருப்ப தாகக் கூறப்படுகிறது. அதில் ஏறத்தாழ 6,000, 8,000 வரையில் தொழுநோய் பிச்சைக்காரர்கள் இருப்பதாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

Dams

* 565 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the stage of construction of the dam across Kudamudayar river for supply of water in the tanks in Valliyur and Radhapuram areas?

1971 ஜூலை 30]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத்திட்டத்திற்கான முதல்நிலை ஆய்வுப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. டி. கணபதி : இந்த குடமுடையாற்று அணைப் பகுதியின் பரப்பளவு எவ்வளவு? தனிப்பட்ட நபர்கள் அரசு நிலத்தில் எவ்வளவு பரப்பைக் கைப்பற்றியுள்ளார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டத்தின் மதிப்பீடு சுமார் 89 லட்சம் ரூபாயாகும். 8,053 ஏக்கர்களில் பாசன வசதி உறுதிப்படுத்தத் திட்டமிருக்கிறது. அது பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்த பிறகுதான் இறுதியான முடிவு எடுக்கப்படும்.

திரு. டி. கணபதி : தனிப்பட்ட நபர்களின் நிலம் பாதிக்கப்படுவதால் இந்தத் திட்டம் காலங்கடத்தப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தனிப்பட்டவர்கள் நிலம் பாதிக்கப்படுகிறதா என்ற விவரங்கள் இல்லை. அப்படிப் பாதிக்கப்பட்டிருந்தாலும் பொது நன்மைக்காக இருந்தால் நில ஆர்ஜித நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

* 566 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the stage of the construction of diversion dam at Alathuraiyar for the diversion of water to the Hanuman River in Nanguneri Taluk?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆலத்துறையாற்றின் குறுக்கே ஒரு திருப்பு அணை கட்டும் வேலை இன்னும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆலத்துறையாற்றில் கிடைக்கும் நீரின் அளவுகளைக் கணித்த பிறகுதான் இத் திட்டம் வகுக்கப்படும்.

திரு. டி. கணபதி : தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் உள்ள படியாறு, அறுத்தலையாறு ஒரே இடத்தில் இருப்பதால் குமரி மாவட்டத்தில் மழை காலத்திலும், மாரி காலத்திலும் அதில் வருகிற ஏராளமான தண்ணீர் வீணாகிக் கடலில் கலந்து விடுவதால், அந்தத் தண்ணிர் வரண்ட பிரதேசமான இராமநாதபுரம் தாலூகாவுக்கு திருப்பு அணை கட்டி திருப்பி விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, திருப்பு அணை கட்டுவதற்கு ரூ. 14 லட்சம் அளவில் திட்டம் போடப்பட்டது. இத் திட்டத்திற்கு நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் தந்து இருக்கிறார். ஆனால், குமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஒப்புதல் தரவில்லை. அரசாங்கம் இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களையும் கூட்டாகச் சென்று அந்த இடத்தைப் பார்வை இட்டு ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இரண்டு பேரும் கூட்டாகச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். பொதுப் பணித்துறை பொறியாளர் தண்ணீரின் அளவைக் கணக்கிட்டு பிறகு அதைப்பற்றி முடிவு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.